ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2456/02 - 2025 සැප්තැම්බර් මස 29 වැනි සඳුදා - 2025.09.29
2456/02 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்**

2025 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்ட, 2002 ஆம் ஆண்டின் 14 இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரிவு (5) இன் பிரிவு (ஊ) இன் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் ருக்தேவி பபெசுவா ஹிமாலி பெர்னாண்டோ ஆகிய நான், இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, 2025.10.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இடர் அடிப்படையிலான மீளளிப்புக் கொடுப்பனவுத் திட்டத்தை செயல்படுத்த தேவையான நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகளினை இக்கட்டளை மூலம் குறிப்பிடுகிறேன்.

ருக்தேவி பபெசுவா ஹிமாலி பெர்னாண்டோ,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,
கொழும்பு 02,
2025, செத்தெம்பர் 29.

103 - G 45481- 53 (2025/10)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இடர் – அடிப்படையிலான மீளளிப்புக் கொடுப்பனவுத் திட்டத்தினை அமுல்படுத்தல்

**பெறுமதி சேர் வரிக்கான இடர் அடிப்படையிலான மீளளிப்புக் கொடுப்பனவுத் திட்டம் - நடைமுறைக்கான ஆவணம்**

**1. அறிமுகம்**

இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித்திட்டம் இரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பெறுமதி சேர் வரி மீளளிப்புக் கொடுப்பனவிற்கான இடர் – அடிப்படையிலான மீளளிப்புக் கொடுப்பனவு (RBRS) செயல்படுத்தப்பட வேண்டும். இந்த இடர் அடிப்படையிலான மீளளிப்புக் கொடுப்பனவுத் திட்டம் (இதற்குப் பின்னர் “இத் திட்டம்" என்று குறிப்பிடப்படும்) ஆனது, இத் திட்டத்திற்குத் தகுதியான ஆட்களுடன் தொடர்புடைய இடரின் அளவை அடிப்படையாகக் கொண்டு மீளளிப்புக் கொடுப்பனவுக் கோரிக்கைகளை மதிப்பிடுவதன் மூலம் பெறுமதி சேர் வரி மீளளிப்புக் கொடுப்பனவு செயல்முறையை நெறிப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இடர் அடிப்படையிலான அணுகுமுறை குறைந்த இடர், நடுத்தர இடர் மற்றும் உயர் இடர் என வகைப்படுத்தப்பட்ட தகுதியுள்ள ஆட்களுக்கு மீளளிப்புக் கொடுப்பனவு செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கு எளிதாகின்றது.

**2. விடயப் பரப்பு**

இச் செயற்பாடுகள் பெறுமதி சேர் வரி முறையின் கீழ் மிகை உள்ளீட்டு வரி வரவுகளைத் திரும்பப் பெற தகுதியுள்ள, தகவுடைய ஆட்களுக்கு இந்த நடைமுறை பொருந்தும். இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம், பணத்தைத் மீளப்பெறுவதற்கான கோரிக்கைக்கு பொருந்தக்கூடிய இடர் அடிப்படையிலான மீளளிப்புக் கொடுப்பனவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் விவரிக்கப்படுகின்றன.

அ. "இடர் அடிப்படையிலான மீளளிப்புக் கொடுப்பனவிற்கான திட்டம்" துல்லியமின்மை, இணக்கமின்மை மற்றும் தகவுடைய ஆட்களின் ஒட்டுமொத்த நடத்தை மற்றும் நம்பகத்தன்மையை அடையாளம் காணும் திறன் கொண்ட முன்னர் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட ஒப்பளவுகளுக்கு அமைய இடர் மதிப்பீட்டு செயல்முறைக்கு உட்பட்டு, இடர்களுக்கான உரிமைகோரல்கள் தொடர்பில் கையாள்வதற்கான திட்டத்தைக் குறிக்கிறது.

மேற்கண்ட அளவுகோல்களின் அடிப்படையில் தகவுடைய ஆட்கள் குறைந்த இடர் கொண்ட தகவுடைய ஆட்கள், நடுத்தர இடர் கொண்ட தகவுடைய ஆட்கள் மற்றும் உயர் இடர் கொண்ட தகவுடைய ஆட்கள் என வகைப்படுத்தப்படுகிறார்கள்.

குறைந்த இடர் அல்லது நடுத்தர இடர் கொண்ட தகவுடைய ஆட்கள் என வகைப்படுத்தப்பட்ட ஆட்கள், கோரிக்கைகளை முன்கூட்டியே சரிபார்த்தலுக்குட்படாமல் மீளளிப்புக் கொடுப்பனவினைப் பெற தகமைபெறுகின்றனர். இருப்பினும், அத்தகைய மீளளிப்புக் கொடுப்பனவு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அதிகாரிகளால் முன்கூட்டிய சரிபார்த்தலுக்குட்படும்.

உயர் இடர் கொண்ட தகவுடைய ஆட்கள் என வகைப்படுத்தப்பட்ட ஆட்கள், மீளளிப்புக் கொடுப்பனவு பெறுவதற்கு தகமை பெறுவது, முன் சரிபார்த்தல் செயல்முறை பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் மாத்திரமாகும்.

ஆ. தகவுடைய ஆட்கள் :

கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆட்கள் இத் திட்டத்தின் கீழ் VAT மீளளிப்புக் கொடுப்பனவைக் கோருவதற்கு தகைமை பெறுகின்றனர்.

i. தகவுடைய ஏற்றுமதியாளர்கள் – திருத்தப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் (VAT சட்டம்) 83 ஆம் பிரிவில் வரைவிலக்கனப்படுத்தப்பட்டுள்ளவாறு.

ii. மூலோபாய மேம்பாட்டுத் கருத்திட்டத்தின் வழங்குநர் - 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மூலோபாய மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் பிரிவு 3 இன் உட்பிரிவு (4) இன் கீழ் அடையாளம் காணப்பட்ட ஏதேனும் மூலோபாய மேம்பாட்டுத் கருத்திட்டத்திற்கு செய்யப்பட்ட பண்டங்களினை அல்லது சேவைகளினை வழங்குகின்றவரும் அவரது பண்டங்களின் அல்லது சேவைகளின் பெறுமதி, அவ்வரி விதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்காக அவரது மொத்த வழங்கல்களின் பெறுமதியில் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட இருந்ததுமான பதிவு செய்யப்பட்ட ஆள்.

iii. குறித்துரைக்கப்பட்ட திட்டத்தின் வழங்குநர் - VAT சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பாகம் II இன் பந்தி (ஊ) இன் விடயம் (ii) ஆம் இன் கீழ் அல்லது VAT சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பாகம் III இன் பந்தி (ஆ) இன் விடயம் (xxi) இன் கீழ் அமைச்சரினால் அடையாளம் காணப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்திற்கு செய்யப்பட்ட பண்டங்களினை அல்லது சேவைகளினை வழங்குகின்றவரும் அவரது பண்டங்களின் அல்லது சேவைகளின் பெறுமதி, அவ்வரி விதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்காக அவரது மொத்த வழங்கல்களின் பெறுமதியில் ஐம்பது சதவீதத்துக்குமேற்பட இருந்ததுமான பதிவு செய்யப்பட்ட ஆள்.

iv. கருத்திட்டம் செயல்படுத்தப்பட்ட ஆரம்ப காலப் பகுதியில் VAT சட்டத்தின் பிரிவு 22(7) இன் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டம்.

## 3. தகவுடைய ஆட்கள் அடையாளம் காணுதல்

### 3.1. தகவுடைய ஏற்றுமதியாளர்கள்

முதல் முறையாக, 2024 ஆம் கலண்டர் ஆண்டில் (சனவரி முதல் திசெம்பர் வரை) VAT விபரத்திரட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில், இந்தத் திட்டத்தின் பணிகளுக்காக தகவுடைய ஏற்றுமதியாளர்களை அடையாளம் காண்பது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பொறுப்பாகும். இந்தத் தகமை 2025 ஒற்றோபர் 01 ஆம் திகதி ஆரம்பமாகி 2026, மாச்சு 31 ஆம் திகதி முடிவடையும் வரி விதிக்கக்கப்படற்பாலதான காலப் பகுதிக்குள் அமுலில் இருக்கும். அதன்பின்னர், முந்தைய ஆண்டிற்கான ஏற்புடைய விபரத்திரட்டில் உள்ள தரவுகளின் அடிப்படையில் வருடாந்த தகைமை மீளாய்வுகள் செய்யப்படுதுடன், அத் தகைமை இரத்து செய்யப்படும் வரை அல்லது அந்த ஆண்டின் ஏப்பிறல் 01 முதல் தொடர்ந்து வரும் ஆண்டின் மாச்சு 31 வரையான வரி விதிக்கக்கப்படற்பாலதான காலப்பகுதி முடியும் வரை, ஆகிய இரண்டில் முதலில் இடம்பெறும் நிகழ்வு வரை அமுலில் இருக்கும்.

### 3.2. அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு மூலோபாய மேம்பாட்டுக் கருத்திட்டத்திற்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்திற்கும் மொத்த விநியோகங்களில் ஐம்பது சதவீதத்திற்கும் (50%) அதிகமாக பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கிய பதிவு செய்யப்பட்ட ஆள்

இந்தத் திட்டத்தின் நோக்கங்களுக்காக, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் உள்ள பதிவுகளின் அடிப்படையில், பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரிவு 22(7) இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களைத் தவிர்ந்த வேறு திட்டங்களை அடையாளம் காண்பது தொடர்பில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பொறுப்பாகும். இது 2025 ஒற்றோபர் 1ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் வரி விதிக்கக்கப்படற்பாலதான காலப் பகுதி தொடக்கம் அல்லது கருத்திட்டம் மூலோபாய மேம்பாட்டுக் கருத்திட்டம் அல்லது குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டமாக பதிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து உடன் அடுத்துவரும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடக்கம், நடைமுறைக்கு வரும்.

### 3.3. VAT சட்டத்தின் பிரிவு 22(7) இன் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டம்

இந்தத் திட்டத்தின் நோக்கங்களுக்காக, உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் காணப்படும் பதிவுகளின் அடிப்படையில் கருத்திட்டங்களை அடையாளம் காண்பது தொடர்பில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பொறுப்பாகும். இது 2025 ஒற்றோபர் 1 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் வரி விதிக்கக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடக்கம் அல்லது VAT சட்டத்தின் பிரிவு 22(7)இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டமாக, பதிவுசெய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட வரி விதக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடக்கம், உடன் அடுத்து வரும் ஆண்டின் மாச்சு 31 ஆம் திகதி வரை அல்லது தகமைகள் இரத்து செய்யப்பட்ட திகதி ஆகிய இவற்றில், முதலில் எழும் திகதி வரை அமுலில் இருக்கும்.

## 4. இடர் அளவுகோல்களை உருவாக்குதல் மற்றும் இடர் மதிப்பீடுகளைக் கணிப்பீடு செய்தல்

1. தகவுடைய ஆட்களின் உண்மைத்தன்மை ஒப்பீடுகள் தொடர்பான சாத்தியக்கூறுகளை அடையாளம் காணுதல், இணக்கப்பாடுகள் மற்றும் அவரது ஒட்டுமொத்த நடத்தையினை மதிப்பீடு செய்வதற்காக, இருப்பினும் அவ் விடயங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாத அளவுகோல்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வகுக்கப்படும்.

2. தகவுடைய ஆட்கள், "குறைந்த இடர் கொண்ட ஆட்கள்", "நடுத்தர இடர் கொண்ட ஆட்கள் "அல்லது "உயர் இடர் கொண்ட ஆட்கள்" என்று உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வகைப்படுத்தப்படும். .

3. இந்த இடர் மதிப்பீடு 2025, ஒற்றோபர் 1 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடக்கம் அமுலுக்கு வருவதுடன், மேலும் மீளாய்வு செய்யப்படும் வரை அல்லது இரத்து செய்யப்படும் வரை நடைமுறையில் இருக்கும். ஆறு மாத இடைவெளிக்குப் பிறகு அல்லது தேவைப்படும் என்று கருதப்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் இடர் மதிப்பீடு தரப்படுத்தல்கள் மீளாய்வு செய்யப்படும்.

**5. மீளளிப்பு செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக தகவுடைய ஆட்களின் பொறுப்புகள்**

1. அனைத்து தகவல்கள் மூலம் சரியான மற்றும் தற்போதைய விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துவதற்காக தகவுடைய ஆட்கள் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) இல் தமது தகவல்களைப் இற்றைப்படுத்தி பராமரிக்க வேண்டும், மீளளிப்பு செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக, தனியான மின்னஞ்சல் முகவரியை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

2. தகவுடைய ஆட்கள், தங்கள் வங்கிக் கணக்குகளில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டால், தகவுடைய ஆட்களினால் அது தொடர்பாக வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) இல் உடனடியாக இற்றைப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் மீளளிப்பு கொடுப்பனவினை சரியான நேரத்தில் மற்றும் பாதுகாப்பாக மேற்கொள்வதற்கு வசதியாக அமையும்.

3. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படும் ஆரம்ப பரிசோதனை மற்றும் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்படும் கள ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, தகவுடைய ஆட்களினால் தேவையான அனைத்து ஆவணங்கள், தகவல்கள், பிரவேசம் மற்றும் தேவையான வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

4. தகவுடைய ஆட்கள், தேவையான அட்டவணைகளை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட இரண்டு முறைகளில் ஒன்றைப் பயன்படுத்த முடியும்:

   அ. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இ – சேவைகளினைப் பயன்படுத்தி நேரடியாக தகவல்களை பதிவு செய்தல்; அல்லது

   ஆ. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இ – சேவைகள் ஊடாக CSVகோப்பாக (எக்சேல் வடிவம்) பதிவேற்றம் செய்தல்.

5. பதிவேற்றப்பட்ட அனைத்து அட்டவணைகளும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலையமைப்பில் உள்ள உத்தியோகபூர்வ "அட்டவணை சரிபார்ப்பு கருவி" இனைப் பயன்படுத்தி சரி பார்க்கப்படல் வேண்டும்.

6. அனைத்து தொடர்புடைய விபரங்கள் மற்றும் அட்டவணைகளையும் சரியாக தயாரிக்கப்பட்டு, சரிபார்த்து வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) இல் பதிவேற்றப்பட்டுள்ளதனை, தகவுடைய ஆளினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7. மீளளிப்புக் கோரிக்கைகளை வினைத்திறனுடன் மற்றும் சரியான நேரத்தில் சரிபார்ப்புக்காக உத்தியோகத்தரினால் கோரும் அனைத்து ஆவணங்களையும் தகவுடைய ஆட்களினால் உடனடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

8. தகவுடைய ஆட்கள், கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முழுப் பெயர், தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட இற்றைப்படுத்தப்பட்ட தொடர்புபட்ட தகவல்களைப் பேணி, சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் தகவல்களைத் திருத்துவதற்கான கோரிக்கைகளின் போது கம்பனியின் பணிப்பாளர் அல்லது வேறு அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் உரியவாறு கையொப்பமிடப்பட்ட எழுத்துமூல கோரிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. சரிபார்ப்புக்குத் தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்களை வழங்குவதில் தவறும் பட்சத்தில் அல்லது தாமதம் ஏற்பட்டால், மீளளிப்பு தொடர்பான கோரிக்கை முற்றாக நிராகரிக்கப்படுவதற்கு அல்லது மீளளிப்புக் கொடுப்பனவினை செயற்படுத்துவதில் மற்றும் வழங்குவதில் தாமதங்களுக்கு காரணமாக அமையக் கூடும் என்பதனை தகவுடைய ஆட்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

10. தகவுடைய ஆட்களினால் பல கருத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில், தகவுடைய ஆட்கள் அந்தந்த மூலோபாய மேம்பாட்டுத் கருத்திட்டங்கள் அல்லது குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட உள்ளீட்டு வரி வரவுகளை தெளிவாக அடையாளங் காண்பதற்காக தெளிவாக மற்றும் தனித்தனியான பதிவுகளைப் பராமரிக்க வேண்டியதுடன் அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில் அத்தகைய தகவல்களை வழங்கப்படல் வேண்டும்.

**6. இடைக்கால சீராக்கங்கள்**

1. 2016, செத்தெம்பர் 27 ஆம் திகதிய 1986/9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் இன் கீழ் வெளியிடப்பட்ட வழிகாட்டல் ஆலோசனைகள், 2025 ஒற்றோபர் 01 முதல் ஆரம்பமாகும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதி தொடக்கம் இரத்து செய்யப்படுகின்றது.

2. இடைநிறுத்தப்பட்ட வழங்கல் மற்றும் வரவு விலைப்பட்டியல் இலக்கத்தினை உறுதிப்படுத்தும் வகையில் அந்தந்த உரிய பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளரின் (RIP), அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக 2025, செத்தெம்பர் மாதம் 30 வரை மேற்கொள்ளப்பட்ட சகல இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களினை 2025 ஒற்றோபர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இ – சேவைகளினைப் பயன்படுத்தி இடைநிறுத்தப்பட்ட விநியோகங்கள் தொடர்பான வெளிப்படுத்தல் படிவம் (SVAT 04) இல் உள்ளடக்குமாறு பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தருக்கு (RIS), தேவைப்படுத்தப்படுகின்றது.

3. இடைநிறுத்தப்பட்ட விநியோகங்கள் மற்றும் தொடர்பான படிவத்தில் (SVAT 04) வழங்கப்பட்ட தகவல்கள் தொடர்புடைய RIP இனால் ஏதேனும் காரணங்களுடன் நிராகரிக்கப்பட்டால், RIP அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக திருத்தப்பட்ட இடைநிறுத்தப்பட்ட விநியோகங்கள் தொடர்பான வெளிப்படுத்தல் படிவம் (SVAT 04) மீண்டும் 2025, ஒற்றோபர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இலத்திரனியல் கோப்பிடும் வசதியைப் பயன்படுத்தி மீண்டும் சமர்ப்பிக்குமாறு RIS இனருக்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

4. 2025, செத்தெம்பர் 30, வரையான இடைநிறுத்தப்பட்ட கொள்வனவிற்காக, வரவு விலைப்பட்டியல் (Credit Voucher) 2025, ஒற்றோபர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இ - சேவைகளினைப் பயன்படுத்தி RIS இனருக்கு வழங்குமாறு RIP இற்கு பணிக்கப்படுவதுடன், இடைநிறுத்தப்பட்ட கொள்வனவு தொடர்பான சுருக்கம், அதாவது SVAT 06 அட்டவணையினை 2025, ஒற்றோபர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு RIP இனருக்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

5. RIS இனருக்கு இடைநிறுத்தப்பட்ட விநியோகங்கள் தொடர்பான சுருக்கம், அதாவது SVAT 07 அட்டவணையினை (மற்றும் ஏற்புடையதாக இருப்பின் SVAT 05a மற்றும் SVAT 05b) 2025, ஒற்றோபர் 30 அல்லது அதற்கு முன்னர் இ – சேவைகளினைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. சகல RIP இனரும், பயன்படுத்தப்படாத எஞ்சிய SVAT வரவு விலைப்பட்டியல்களினை, 2025 நவெம்பர் 10 ஆம் திகதிக்குள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நடுத்தர அளவிலான கூட்டிணைந்த நிலுவை வரியினை சேகரிக்கும் அலகு 01 இற்கு (MDC அலகு 01) இல் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

7. 2025, ஏப்பிறல் 01 முதல் 2025 செத்தெம்பர் 30 வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இடைநிறுத்தப்பட்ட விநியோகங்களிற்காக 2025, ஒற்றோபர் 01ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் இடைநிறுத்தப்பட்ட வரி விலைப்பட்டியல் வழங்கப்பட்ட திகதி தொடக்கம் 06 மாதங்களுக்குள், செலவுத்தாள் அல்லது வரவுத் தாள் வழங்கப்பட்டிருப்பின், அத்தகைய செலவுத்தாள் அல்லது வரவுத் தாளின் விபரங்கள் SVAT 05a அல்லது SVAT 05b அட்டணையில் எக்செல் (Excel) வடிவத்தில் தயாரித்து அம் மென்பிரதி TIN இலக்கம் ஒதுக்கப்பட்டுள்ள உரிய அலகிற்கு கையளிக்கப்படல் வேண்டும்.

8. தொடர்புடைய இடைநிறுத்தப்பட்ட வரி விலைப்பட்டியலுக்கான, செலவுத்தாள் அல்லது வரவுத் தாள் என்பவற்றுடன் தொடர்புடையவற்றை திருத்துவதற்கு, இடைநிறுத்தப்பட்ட வரி விலைப்பட்டியல் முதலில் வெளிப்படுத்தப்பட்ட வரி விதிக்கப்படற்பாலதான எந்தக்காலப்பகுதிக்குரியதோ, அக்காலப்பகுதிக்குரிய ஏற்புடைய SVAT அட்டவணை பதிவுகள் (SVAT 4, SVAT 6 மற்றும் SVAT 7) உள்ளிட்ட VAT விபரத்திரட்டினைத் திருத்துவதன் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும், அத்தகைய திருத்தம் இடைநிறுத்தப்பட்ட விநியோகம் மற்றும் இடைநிறுத்தப்பட்ட VAT இனைச் சரிசெய்யும் நோக்கத்திற்காக மட்டுமே பொருந்துவதுடன், அத்தகைய திருத்தங்கள், ஆரம்ப விபரத்திரட்டு சமர்ப்பிக்கப்பட்ட திகதி மற்றும் மதிப்பீடுகளை வழங்குவதற்குப் பொருந்தும் சட்டப்பூர்வ கால எல்லை ஆகியவற்றைப் பாதிக்காது.

EOG 10 - 0015

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது